## தூத்துக்குடி மாவட்டத்தில்

# நீரில் மூழ்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, மே 14-

தூத்துக்குடி மாவட்டத்தில் நீரில் மூழ்கி உயிரிழந்த குடும்பத்தினருக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் தெரிவித்து நிதியுதவி அறிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திக்குளம் வட்டம், புதூர் குறுவட்டம், சிவலார்பட்டி கிராமம், தெற்குத் தெருவைச் சேர்ந்த முருகேசன் என்பவரின் மகன்கள் செல்வன். மகேஸ்வரன் (வயது 12), செல்வன். அருண்குமார் (வயது 9) மற்றும் செல்வன். சுதன் த/பெ. கார்த்திகேயன் (வயது 7) ஆகியோர் (12.5.2023) அன்று மாலை சிவலார்பட்டி கண்மாயில் குளிக்கச் சென்றபோது எதிர்பாராத விதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

உயிரிழந்த சிறுவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களின் குடும்பத்திற்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொதுநிவாரண நிதியிலிருந்து வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## அறங்காவலர்கள் நியமனம் தொடர்பாக

# தமிழ்நாடு அரசு மேற்கொண்ட நடவடிக்கை!

## உச்சநீதிமன்றம் பாராட்டு!

புதுடெல்லி, மே 14-

இந்து சமய அறநிலையத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களுக்கு அறங்காவலர்கள் நியமனம் செய்வது குறித்து இந்து தர்ம பரிஷத் தாக்கல் செய்த வழக்கு நேற்று முன்தினம் (12.05.2023) மாண்பமை உச்சநீதிமன்றத்தில் நீதியரசர்கள் ஏ. எஸ்.போபண்ணா மற்றும் சஞ்சய் கரோல் ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு வரப்பெற்றது.

இவ்வழக்கில் தமிழ்நாடு அரசின் சார்பில் அறங்காவலர்கள் நியமனம் செய்திட மாவட்டக் குழு அமைத்து அரசால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் மற்றும் திருக்கோயில்களில் அறங்காவலர்கள் நியமனம் செய்து பிறப்பிக்கப்பட்ட ஆணைகளின் நகல்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன.

இவ்விசாரணையின் போது அறங்காவலர்களை நியமனம் செய்திட தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளை நீதியரசர்கள் பாராட்டியதுடன் விரைவில் அனைத்து திருக்கோயில்களுக்கும் அறங்காவலர்கள் நியமனம் செய்திட அறிவுறுத்தி, வழக்கினை ஆகஸ்ட் மாதம் கடைசி வாரத்திற்கு ஒத்தி வைத்தனர்.



கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட நாலாட்டின்புத்தூரில் புதிதாக கட்டப்பட்ட ஊராட்சி மன்ற அலுவலகத்தை சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன் திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து கோவில்பட்டி மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் மணியாச்சியில் கீழ ஈரால் கிராமத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றினார். உடன் ஒன்றியச் செயலாளர் நவநீதக் கண்ணன், எட்டையபுரம் பேரூர்க் கழகச் செயலாளர் பாரதி கணேசன் உள்ளிட்டோர் உடன் கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியத் தலைவர் திருமதி. கஸ்தூரிசுப்புராஜ், முன்னாள் ஒன்றியத் தலைவர் சுப்புராஜ், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பீக்கிலிப்பட்டி முருகேசன், ராதாகிருஷ்ணன், சதீஸ், ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி. கடல்ராணி அந்தோணிராஜ், துணைத் தலைவர் திருமதி. பத்மாவதி, ஒன்றிய கவுன்சிலர் திருமதி. முத்துமாரி தாமோதரக்கண்ணன் உள்ளிட்டோர் மற்றும் தி.மு.க. கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணி

# மாவட்ட ஒருங்கிணைப்பாளர் - துணை ஒருங்கிணைப்பாளர்கள் நியமனம் (நான்காவது பட்டியல்)

## தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, எம்.எல்.ஏ., அறிவிப்பு!

**கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணியின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் துணை ஒருங்கிணைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.**

**கடலூர் கிழக்கு மாவட்டம்**

**மாவட்ட ஒருங்கிணைப்பாளர்** - A.ஜாபர் அலி B.Sc., (CS) (சிதம்பரம்)

**மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்** - E.முத்தமிழ் செல்வன் ME (களப்பணி) (காட்டுமன்னார் கோயில்), GB.கௌதம் DME,NPTI,PGDHSE (குறிஞ்சிப்பாடி), J. உமாபாலன் BE (புவனகிரி), P.பிரவீன்குமார் BE (கடலூர்), திரு R.ராகவன் M.A , P.G.D.C.A, D.C.E (சிதம்பரம்), (சமூகவலைதளம்) VM.வெற்றி செல்வன் ME, (மகளிர்) திருமதி.அருளரசி கருணாநிதி M.Com,B.Ed

**மயிலாடுதுறை மாவட்டம்**

**மாவட்ட ஒருங்கிணைப்பாளர்** - K விக்னேஷ் BTech (மயிலாடுதுறை)

**மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்** - R சுரேஷ் குமார் DEEE, BBA, BA, B.Tech (களப்பணி) (பூம்புகார்), R ஸ்ரீராம் Msc DME,NPTI,PGDHSE (சீர்காழி), கதிர் ராதாகிருஷ்ணன் DCE (மயிலாடுதுறை), R அருள் (சீர்காழி), (சமூகவலைதளம்) R சரபோஜி ராஜன் ITI, (மகளிர்) திருமதி A ஷகிலா அஜீஸ் Bsc

**சென்னை தெற்கு மாவட்டம்**

**மாவட்ட ஒருங்கிணைப்பாளர்** - மணிகண்டன் நாடிமுத்து எம்.எஸ்.சி (சைதாப்பேட்டை)

**மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்** - ஜே.வி.பிரதாப் (களப்பணி) (சைதாப்பேட்டை), திருமதி.R.காயத்ரி (வேளச்சேரி), P. சுரேஷ் (விருகம்பாக்கம்), S.தினகரன், (மதுரவாயல்), D.S. பாரதிராஜன் எம்.இ., எல்.எல்.பி., (சோழிங்கநல்லூர்) (சமூக வலைதளம்) மு.செல்வகுமார், (மகளிர்) திருமதி. சபானா திருக்குறளார்

**சென்னை வடக்கு மாவட்டம்**

**மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்** - ரசூல் மொய்தீன் (சமூகவலைதளம்)

**கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்**

**மாவட்ட ஒருங்கிணைப்பாளர்** - மு.சதீஸ் M.com.,M. phil.,PGDCA (கன்னியாகுமரி)

**மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்** - S.ரெனால்டு ஷிபின் DEEE (களப்பணி) (குளச்சல்), தா.நாகராஜன் BBA (கன்னியாகுமரி), ஆ.பீட்டர் Bsc.,BEd (நாகர்கோயில்), (சமூகவலைதளம்) M. ஆஸ்டின் பெனட் Dip. (மகளிர்) திருமதி. ம.ஜெமிலா ஆன்றனி BA,BL,

**கோவை மாநகர் மாவட்டம்**

**மாவட்ட ஒருங்கிணைப்பாளர்** - ஆர்.கே.சுரேஷ்குமார் MBA

**மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்** - மு. ஜெயபிரகாஷ் B.E..,MBA., களப்பணி (கோவை வடக்கு), இ. திருநாராயணன் B.E.(கோவை தெற்கு), வ.சங்கர் B.Sc (சிங்காநல்லூர்), சமூக வலைத்தளம் திரு.எஸ்.கருணாநிதி, மகளிர் திருமதி.பவித்ரா மோகன் குமார்

**கோவை தெற்கு மாவட்டம்**

**மாவட்ட ஒருங்கிணைப்பாளர்** - பா.ரமேஷ் பாலன் B.Tech., BA.,LLB

**மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்** - ஆ.சிவானந்தம் B.A களப்பணி (பொள்ளாச்சி), க.துளசிராமன் DAE (கிணத்துக்கடவு), மொ.அப்பாஸ் CSC (சூலூர்), சு. முத்துக்குமார் B.com., MBA (வால்பாறை), சமூக வலைத்தளம் தி.சதீஷ்குமார் B.A, மகளிர் திருமதி. ரா.சிந்துஜா B.Com., B.L.

**கோவை வடக்கு மாவட்டம்**

**மாவட்ட ஒருங்கிணைப்பாளர்** - சி.ஹரீஷ்

**மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்** - கார்த்திக் தண்டபாணி - களப்பணி (தொண்டாமுத்தூர்), சுப்ரமணியம் (கவுண்டன்பாளையம்), குணசேகரன் (மேட்டுபாளையம்), சமூக வலைத்தளம் திரு.பா.சாகவிக்னேஷ் பாபு, மகளிர் செல்வி ரம்யா

**கரூர் மாவட்டம்**

**மாவட்ட ஒருங்கிணைப்பாளர்** - தம்பி S.சுதாகர் BA (கரூர்)

**மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்** - R.அசோக் குமார் , B.Sc.,B.Ed., (களப்பணி) (கிருஷ்ணராயபுரம்), S.தீபக், D.EE (அரவக்குறிச்சி), R.மதியழகன் B.A (குளித்தலை), க. விக்னேஷ் சபாபதி, M.Sc.IT (கரூர்), பி. விமலார்த்தினி, BA., BL., (கரூர்), எஸ். கனிமொழி, B.Com., (கரூர்), (சமூகவலைதளம்) திரு. அ.ஞானசேகர், (மகளிர்) S. பானுப்பிரியா , B.A.,B.Ed.,

**மதுரை மாநகர் மாவட்டம்**

**மாவட்ட ஒருங்கிணைப்பாளர்** - வெ.பாலகிருஷ்ணன் DEEE

**மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்** - அ.முகமது மன்சூர் BE - களப்பணி (மதுரை வடக்கு ), சே.சந்திரகாசன் MCA (மதுரை தெற்கு ), பா.ஜெயபிரகாஷ் BE (மதுரை மையம் ), செ.தண்டபாணி B.com (மதுரை மேற்கு ), பெ.மாரநாடு (மதுரை வடக்கு), சமூக வலைத்தளம் திரு.ரா.ஹரீஷ் குமார் BE, மகளிர் திருமதி.வி.தமிழ்செல்வி B.Sc

**திருச்சி வடக்கு மாவட்டம்**

**மாவட்ட ஒருங்கிணைப்பாளர்** - பி. ரமேஷ்

**மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்** - பி. சேகர் - களப்பணி (துறையூர்), வி.ராஜா (மண்ணச்சநல்லூர்), ஆ. சண்முகராஜ் (முசிறி), சமூக வலைத்தளம் திரு. எம்.நந்திவர்மன், மகளிர் திருமதி.பிரபா ரமேஷ்

**ஈரோடு தெற்கு மாவட்டம்**

**மாவட்ட ஒருங்கிணைப்பாளர்** - டாக்டர் கே.பார்த்திபன்,

**மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்** - எம்.அஜய்பிரசாத் களப்பணி (ஈரோடு கிழக்கு), ஆர்.ராஜதளபதி (ஈரோடு மேற்கு), எஸ்.டி.மனோஜ்குமார் (மொடக்குறிச்சி), கே. உமா மகேஷ்வரி (பெருந்துறை), சமூக வலைத்தளம் அலாவுதீன், மகளிர் எஸ். ஹேமலதா சம்பத்குமார்

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை-18.
நாள்: 12-05-2023

**முனைவர். டி.ஆர்.பி.ராஜா, எம்.எல்.ஏ.,**
செயலாளர்
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி



# தி.மு.க. இளைஞர் அணி

## மாவட்ட, மாநகர அமைப்பாளர் – துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கான நேர்காணல்

## இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

தி.மு.க. இளைஞர் அணியின் மண்டலம் 4, 5, 6, 7 & 9 ஆகியவற்றில் உள்ள கீழ்காணும் கழக மாவட்டங்களில் இருந்து மாவட்ட, மாநகர அமைப்பாளர்– துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பித்தவர்கள், வருகிற 15.05.2023 (திங்கள்), 16.05.2023 (செவ்வாய்) மற்றும் 17.05.2023 (புதன்) ஆகிய தேதிகளில் நடைபெறும் நேர்காணலில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நேர்காணலில் கலந்துகொள்ள வரும் விண்ணப்பதாரர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய வயதை நிருபிப்பதற்கான சான்றிதழ், கழக உறுப்பினர் அட்டை, கழக அமைப்புகளில் ஏற்கெனவே பணியாற்றியிருந்தால் அதுதொடர்பான புகைப்படம் மற்றும் ஆவணங்களுடன் வருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அனைவருக்கும் வாழ்த்துகள்!

**நேர்காணல் தேதி : 15.05.2023, திங்கள்கிழமை**

**இடம் : சுகுணா மினி ஹால், காளப்பட்டி சாலை, கோவை.**

| வ.எண் | மாவட்டம் | நேரம் |
|---|---|---|
| 1 | நீலகிரி | காலை 9.30 |
| 2 | ஈரோடு வடக்கு | காலை 10.00 |
| 3 | ஈரோடு தெற்கு | காலை 10.30 |
| 4 | திருப்பூர் வடக்கு | காலை 11.00 |
| 5 | திருப்பூர் தெற்கு | மதியம் 12.00 |
| 6 | கரூர் | மதியம் 12.30 |
| 7 | கோவை வடக்கு | மதியம் 1.00 |
| 8 | கோவை தெற்கு | மதியம் 1.30 |
| 9 | கோவை மாநகர் | மதியம் 2.00 |

**நேர்காணல் தேதி : 16.05.2023, செவ்வாய்கிழமை**

**இடம் : துவாரகா பேலஸ், பாண்டிக்கோவில் ரிங் ரோடு, மதுரை. (மதுரை- சென்னை பைபாஸ்)**

| வ.எண் | மாவட்டம் | நேரம் |
|---|---|---|
| 1 | கன்னியாகுமரி கிழக்கு | காலை 9.30 |
| 2 | கன்னியாகுமரி மேற்கு | காலை 10.00 |
| 3 | தூத்துக்குடி வடக்கு | காலை 10.30 |
| 4 | தூத்துக்குடி தெற்கு | காலை 11.00 |
| 5 | நெல்லை கிழக்கு | காலை 11.30 |
| 6 | நெல்லை மத்திய | மதியம் 12.00 |
| 7 | மதுரை வடக்கு | மதியம் 12.30 |
| 8 | மதுரை தெற்கு | மதியம் 12.45 |
| 9 | மதுரை மாநகர் | மதியம் 1.15 |

**நேர்காணல் தேதி : 17.05.2023, புதன்கிழமை**

**இடம் : கலைஞர் அறிவாலயம், திருச்சி.**

| வ.எண் | மாவட்டம் | நேரம் |
|---|---|---|
| 1 | காரைக்கால் | காலை 9.30 |
| 2 | நாகப்பட்டினம் வடக்கு | காலை 10.00 |
| 3 | நாகப்பட்டினம் தெற்கு | காலை 10.30 |
| 4 | திருவாரூர் | காலை 11.00 |
| 5 | திண்டுக்கல் கிழக்கு | காலை 11.30 |
| 6 | திண்டுக்கல் மேற்கு | மதியம் 12.00 |
| 7 | நாமக்கல் கிழக்கு | மதியம் 12.15 |
| 8 | நாமக்கல் மேற்கு | மதியம் 1.00 |

**"அன்பகம்"**
சென்னை – 18.
நாள் : 12–05–2023.

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி